Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம் : வரலாறு

வாரம் - 10

தரம்: 11

ஆக்கம்: ஆசிரியை N. பத்மலோஷனி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

## இலங்கை சுதந்திரம் அடைதல்

### 1972 இல் இலங்கை குடியரசாதல்

1948 - 1972 காலகட்டத்தில் சோல்பரி அரசியல் யாப்பு இந்நாட்டில் நடைமுறையில் இருந்தது. இவ்வாட்சி முறையின்படி பிரித்தானிய மகாராணி இந்நாட்டின் பெயரளவு ஆட்சித் தலைவராக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ் அரசியல் யாப்பு முறையை மாற்றி புதிய அரசியல் யாப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற அபிப்பிராயம் எழுந்தது. எனினும் இது தொடர்பான செயற்பாடு 1970 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் பின்னரே மேற்கொள்ளப்பட்டது.

### 1972 அரசியல் யாப்பின் அடிப்படை அம்சங்கள்

- இதுவரை லங்கா எனப்பட்ட இந்நாடு இதன் பிறகு ஸ்ரீலங்கா என்ற பெயரால் அழைக்கப்படல்.
- பிரித்தானிய பேரரசுடன் கொண்டிருந்த அரசியல் யாப்பு ரீதியான தொடர்புகளை முடிவுக்கு கொண்டு வரல்.
- இலங்கையை ஒன்றுபட்ட குடியரசாக்குதல்
- மனித உரிமைகளை பாதுகாத்தல்

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக**

1. 1972 யாப்பின் படி உருவாக்கப்பட்ட சட்டம் இயற்றும் சபை எவ்வாறு அழைக்கப்பட்டது.
   I. பாராளுமன்றம் II. சட்டவாக்கக்கழகம் III. அரசுக்கழகம் IV. தேசிய அரசுப் பேரவை

2. அடிப்படை மனித உரிமைகள் முதன்முறையாக சேர்க்கப்பட்ட இலங்கையின் அரசியல் யாப்பு.
   I. 1978 ஆண்டு யாப்பு II. டொனமூர் யாப்பு III. சோல்பரி யாப்பு IV. 1972 ஆண்டு யாப்பு

3. இலங்கையின் குடியியல் வழக்குகளை விசாரிக்க அங்கீகாரம் கொண்ட நீதிமன்றம்
   I. மேன் முறையீட்டு நீதிமன்றம் II. மாவட்ட நீதிமன்றம்
   III. உச்ச நீதிமன்றம் IV. நீதவான் நீதிமன்றம்

4. இலங்கையின் முதலாவது பெயரளவு ஜனாதிபதி
   I. J.R. ஜயவர்தன II. மஹிந்த ராஜபக்ஷ
   III. வில்லியம் கோபல்லாவ IV. R. பிரேமதாஸ

5. பின்வருவனவற்றுள் 1ம் குடியரசு யாப்பு செயற்பட்ட தேசிய அரசுப் பேரவையின் கமமை பற்றிய பொய்யான கூற்று
   I. மக்களின் சட்டமியற்றும் அதிகாரத்தை செயற்படுத்தல்
   II. பொதுநிதியை பரிபாலனம் செய்தல்
   III. நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் மக்களின் குறைபாடுகளை தீர்த்தல்
   IV. பிரதமரையும் ஏனைய அமைச்சர்களையும் நியமித்தல்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1. 1970 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முகங் கொடுப்பதற்காக ஐக்கிய முன்னனியில் இணைந்து கொண்ட கட்சிகள் யாவை?

2. 1972 ஆம் ஆண்டு யாப்பை அறிமுகப்படுத்திய திகதி என்ன?

3. முதலாம் குடியரச யாப்பின் அடிப்படை அம்சங்கள் நான்கு தருக.

4. 1972 ஆம் ஆண்டு யாப்பின்படி தேசிய அரசுப் பேரவையின் பதவிக் காலம் யாது?

5. முதலாம் குடியரசு யாப்பின் படி உருவாக்கப்பட்ட நீதிமன்றத் தொகுதியை ஒழுங்கு முறைப்படி எழுதுக.

6. 1972 ஆம் ஆண்டு யாப்பில் அறிமுகப்படுத்திய ஜனாதிபதி பதவி தொடர்பாக சுருக்கமாக விளக்குக.

7.



I. இவரது பெயரை குறிப்பிடுக.

II. சோல்பரி அரசியல் யாப்பில் இவர் வகித்த பதவி என்ன?

III. 1972 ஆம் ஆண்டு யாப்பில் இவரது பதவி என்ன?

IV. இவர் யாருடைய ஆலோசனையின் பேரில் அமைச்சர்களை நியமிப்பார்?